بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/07/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற போர்கள் பற்றிக் கூறப்பட்டு கொண்டிருந்தது. மதாயின் வெற்றி தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பு பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் 'சீரத் காத்தமுன்னபிய்யீன்' நூலில் எழுதுகிறார்கள்:

அகழ் தோண்டிக் கொண்டிருந்த போது, ஓரிடத்தில் ஒரு பாறை தென்பட்டது. அது எப்படியும் உடைந்தபாடில்லை. தொடர்ச்சியாக மூன்று நாள்கள் பட்டினியாக இருந்ததால், சஹாபா சோர்வடைந்திருந்தனர். கடைசியில் வேறுவழியின்றி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட பசியின் காரணமாக வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக அங்கு சென்று, ஒரு கடப்பாறையை எடுத்து, அல்லாஹ்வின் பெயரைக் கூறி கல் மீது அடித்தார்கள். இரும்பு பட்டதால் கல்லிருந்து தீப்பொறி கிளம்பியது.

இதைப் பார்த்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரத்த குரலில், 'அல்லாஹு அக்பர்' என்று கூறினார்கள். மேலும், 'எனக்கு சிரியா அரசின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. சிரியாவின் செந்நிற மாளிகைகள் என் கண்முன் இருக்கின்றன' என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது முறை அடித்தார்கள். மேலும், 'எனக்கு பாரஸீகத்தின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. மதாயினின் வெள்ளை மாளிகைகள் எனக்குத் தென்படுகின்றன' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்றாவது முறை அடித்தார்கள். மேலும், 'இப்போது எனக்கு ஏமனின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. 'ஸன்ஆ' வின் வாயில்கள் எனக்குக் காட்டப்படுகின்றன' என்று கூறினார்கள்.

இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட ஆன்மீக காட்சிகள். ஆக, அந்த இக்கட்டான தருணத்தில், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வருங்கால வெற்றிகள் மற்றும் வளங்களின் காட்சிகளைக் காட்டி, சஹாபாவிடம் தன்னம்பிக்கையும் உற்சாகத்தின் ரூஹையும் ஏற்படுத்தினான். மதாயின் வெற்றி குறித்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களின் கைகளால் நிறைவேறியது.

காதிஸியா வெற்றிக்குப் பிறகு, தற்போதைய ஈராக்கின் தொன்மையான நகரமான பாபிலோனை வெற்றி கண்டார்கள். பாபிலோனை வெற்றி கண்ட பிறகு, 'கூஸா' எனப்படும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தை அடைந்தார்கள். இது பாபிலோனின் சுற்றுவட்டார பகுதியாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நம்ரூத் சிறைபிடித்த அந்த இடம் தான் 'கூஸா'. சிறைச்சாலை இருந்த இடம் அப்போது வரை பாதுகாப்பாக இருந்தது. ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்து, அந்த சிறைச்சாலையைப் பார்த்த போது, திருக்குர்ஆனின் இந்த வசனத்தை ஓதினார்கள்:

تِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ

அதாவது, நாம் (வெற்றியின்) இந்த நாள்களை மக்களிடையே, அவர்கள் அறிவுரை பெறும் பொருட்டு மாறி மாறி வரச் செய்கின்றோம்.

பிறகு, 'கூஸா' வழியாக சென்றவாறு இஸ்லாமிய படை 'பஹுர் ஸீர்' சென்றடைந்தது. இங்கு ஈரானியர்கள் கிஸ்ரா பேரரசரின் வேட்டை சிங்கத்தை படை மீது ஏவிவிட்டார்கள். அது கர்ஜித்தவாறு இஸ்லாமிய படைகளைத் தாக்கியது. ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களின் சகோதரர் ஹாஷிம் பின் அபீ வக்காஸ் அவர்கள் சிங்கத்தின் மீது வாள்வீசினார்கள். சிங்கம் அங்கேயே மாண்டு வீழ்ந்தது.

கிஸ்ராவின் தலைநகரமான 'மதாயின்' பாக்தாதிலிருந்து தெற்கு திசையில், சிறிது தூரத்தில், டைகிரிஸ் ஆற்றங்கரையோரம் அமைந்திருந்தது. முஸ்லிம் படைகளுக்கு ஆற்றைக் கடப்பதற்கான எந்த சூழலும் தென்படவில்லை. ஓரிரவு ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களுக்குக் கனவில், முஸ்லிம்களின் குதிரைகள் தண்ணீரில் இறங்குவதாகக் காட்டப்பட்டது. ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள், 'முஸ்லிம்களே! வாருங்கள்! இந்த ஆற்றை நீந்திக் கடக்கலாம்' என்று கூறியவாறு தமது குதிரையை ஆற்றில் இறக்கிவிட்டார்கள். அவர்களைப் பின்பற்றியவாறு ஏனைய போர்வீரர்களும் தங்களது குதிரைகளை ஆற்றில் இறக்கிவிட்டார்கள். எதிரிப்படை இந்த வியப்பூட்டும் காட்சியைப் பார்த்த போது, 'அரக்கர்கள் வந்துவிட்டார்கள்; அரக்கர்கள் வந்துவிட்டார்கள்' என்று கதறிக் கொண்டே ஓடினர். முஸ்லிம்கள் முன்னோக்கி சென்று நகரத்தையும் கிஸ்ராவின் மாளிகைகளையும் கைப்பற்றிவிட்டனர்.

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ்ப்போர் சமயத்தில் செய்த அந்த முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது. ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் அரசு கருவூலங்களையும் அரிய பொருள்களையும் ஒன்றுதிரட்டுமாறு ஆணையிட்டார்கள். முஸ்லிம் போர்வீரர்கள் மிகவும் நேர்மையுடன் எல்லாப் பொருள்களையும் ஒன்று திரட்டி விட்டார்கள். போர்ச்செல்வம் விதிமுறைப்படி விநியோகிக்கப்பட்டு ஐந்தாவது பாகம் கிலாஃபத் அவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது.

ஜலூலா போர் ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு நடைபெற்றது. மதாயினில் தோல்வியைத் தழுவிய பிறகு, ஈரானியர்கள் பாக்தாதுக்கும் குராஸானுக்கும் இடையில் அமைந்திருந்த 'ஜலூலா' நகரத்தில் ஒன்றிணைந்து போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளையின் பேரில், ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் ஹாஷிம் பின் உத்பாவிடம் 12,000 பேர் கொண்ட படையை ஒப்படைத்து ஜலூலாவுக்கு அனுப்பி வைத்தார்கள். முஸ்லிம்கள் மாதக்கணக்கில் நகரத்தை முற்றுகையிட்டிருந்தனர். இதற்கிடையில், ஏறத்தாழ 80 சிறிய போர்கள் நடைபெற்றன.

ஜலூலா வெற்றி கண்ட போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அரபு அல்லாத மக்களைப் பின்தொடர்வதை விட்டும் தடுத்தவாறு, 'நான் போர்ச்செல்வத்தைக் காட்டிலும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கிறேன்' என்று கூறினார்கள். போர்ச் செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட போது, அன்னார் போர்ச்செல்வத்திலிருந்த விலைமதிப்பற்ற இரத்தினங்களைக் கண்டு அழ ஆரம்பித்தார்கள். மேலும் அன்னார், 'அல்லாஹ் எந்த சமுதாயத்திற்கு இவற்றை வழங்குகின்றானோ அவர்களுக்கிடையே பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் அதிகரித்து விடுகிறது' என்று கூறினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய, இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டிய விஷயமாகும். நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், முஸ்லிம்களிடம் செல்வம் வந்த பிறகு பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே சென்று விட்டது.

ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் மதாயினில் இருக்கும் போதே அவர்களுக்கு, ஈரானிய படை மைதான பகுதிகளின் பால் முன்னோக்கி வருவதாகத் தகவல் கிடைத்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க, ஸிரார் பின் கத்தாப் அவர்களின் தலைமையில் ஒரு படை எதிர்கொள்வதற்காக புறப்பட்டது. மாஸப்ஸானுடைய மைதான பகுதியான 'ஹந்தஃப்' எனும் இடத்தில் போர் நடைபெற்றது. ஈரானியர்கள் இங்கும் தோல்வியைத் தழுவினர்.

ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் படை கண்ணோட்டத்தில், சில பயன்களை எண்ணி, ஈராக்கில் சிறிய வட்டத்தில் இன்னோரு முன்னணிப்படையை உருவாக்கிவிட்டார்கள். படைமுகாமாக பஸரா நகரத்திற்கு வித்திட்டார்கள். ஈரானிய படையின் உதவிப்படை வந்தடைந்து விடக்கூடாது என்பதே இந்தப் பகுதியில் படையை அமர்த்தியதற்கான பெரிய நோக்கம் ஆகும்.

முஸ்லிம்கள் குஜெஸ்தானுடைய பிரசித்தி பெற்ற நகரம் அஹ்வாஸைக் கைப்பற்றினார்கள். அப்போது அங்கிருந்த தலைவர் ஃபிரோஸ் சமரசம் செய்து கொண்டார். இந்தப் போரில் முஸ்லிம்கள் பல மக்களைப் பிடித்து அடிமையாக்கினர். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆணைப்படி அனைவரையும் விடுவிக்கப் பட்டது. இந்தப் பகுதியில் ஈரானியர்கள் இரண்டு வழிகளின் வாயிலாக முஸ்லிம் படை மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தி வந்தனர். முஸ்லிம்கள் இந்த இரண்டு பாதைகளையும் கைப்பற்றி விட்டனர்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நமக்குப் பெரும்பாலான இடங்களில் இதுதான் தென்படுகிறது. அதாவது, எங்கெல்லாம் முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுக்கப்பட்டதோ; அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதோ அங்கு தான் முஸ்லிம்கள் தாக்குதல் தொடுத்தார்கள்; அந்த இடங்களைக் கைப்பற்றினார்கள்.

ஜலூலாவில் முஸ்லிம்கள் வெற்றி பெற்ற பிறகு, ஈரானியர்கள் ஹுர்முஸான் தலைமையில் ராம்ஹார்மோஸ் எனும் இடத்தில் ஒன்றுகூடினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க, ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் நுஃமான் பின் முக்ரின் அவர்களை கூஃபாவிலிருந்தும் அபூ மூஸா அஷ்அரீ அவர்களை பஸராவிலிருந்தும் படையின் தலைவர்களாக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், 'இரண்டு படைகளும் ஒன்றிணைந்த பிறகு அபூ ஸப்ரா பின் ருஹ்ம் அவர்கள் அவர்களின் தளபதியாக இருப்பார்கள்' என்று வழிகாட்டினார்கள். நுஃமான் பின் முக்ரின் அவர்களின் படையோடு ஹுர்முஸான் போரிட்டார். அவர் தோல்வியடைந்து சூசுத்தர் எனும் இடத்திற்கு ஓடிவிட்டார்.

நீண்ட முற்றுகைக்குப் பிறகு நகரம் வெற்றி காணப்பட்ட போது, ஹுர்முஸான் சிறைபிடிக்கப்பட்டார். அவர் தனது விவகாரம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தினார். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ அவர்கள் ஹுர்முஸானை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மதீனாவுக்கு அனுப்பிவிட்டார். படைக்குழு மதீனாவுக்குள் நுழைந்த போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் முஸ்லிம்களும் ஹுர்முஸானுடைய அசல் தோற்றத்தைக் காண வேண்டும் என்பதற்காக, அவருக்கு அவருடைய பட்டாடை அணிவிக்கப்பட்டது. அதில் தங்கத்தால் வேலைப்பாடு நடந்திருந்தது. அவரது தலையில் வைரம் பதிக்கப்பட்ட மகுடம் வைக்கப்பட்டது. பிறகு, அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குறித்து கேட்டபோது, மக்கள் அன்னார் பள்ளியில் இருப்பதாகக் கூறினார்கள். அவர்கள் எல்லாம் பள்ளியை அடைந்த போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது தலைப்பாகையில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஹுர்முஸான், 'உமர் எங்கே இருக்கிறார்கள்?' என்று கேட்டார். மக்கள், 'அன்னார் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்று கூறினார்கள். அப்போது பள்ளியில் அன்னாரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஹுர்முஸான், 'அவர்களுடைய காவலாளிகளும் அரசவை ஊழியர்களும் எங்கே?' என்று கேட்டார். மக்கள், 'அன்னாருக்கு எந்தவொரு காவலாளி, அரசவை ஊழியர், எழுத்தாளர் மற்றும் செயலாளரின் தேவையும் இல்லை' என்று கூறினார்கள். ஹுர்முஸான் தன்னையும் அறியாமல், 'நிச்சயமாக! இவர் ஒரு நபியாகத் தெரிகிறார்' என்றார். மக்கள், 'நபி இல்லை; ஆனால், கண்டிப்பாக நபிமார்களின் வழிமுறையில் இருக்கிறார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எளிமையைக் கண்டு ஹுர்முஸான் மிகவும் தாக்கத்திற்காளானார். அவர் ஒரு சுவாரஸ்யமான உரையாடலுக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மேலும், மதீனாவிலேயே தங்க ஆரம்பித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு ஈராயிரம் ஓய்வூதியம் நிர்ணயித்தார்கள். 'இக்துல் ஃபரீத்' எனும் நூலில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈரான் மீது படையெடுப்பதில் ஹுர்முஸானிடம் ஆலோசனை கேட்டு, அவரது கருத்துப்படி நடைமுறைப்படுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கொன்றதில் ஹுர்முஸானுடைய கை இருந்ததாக ஐயம் கொள்ளப்படுகிறது. ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இந்த ஐயத்தைச் சரியானதாகக் கருதவில்லை. ஆக, அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கொன்ற கொலையாளி ஃபைரோஸ் கொலைக்கு முன்னதாக ஒரு நாள் ஹுர்முஸானைச் சந்தித்தான். ஃபைரோஸுடைய கையில் கத்தியைப் பார்த்த ஹுர்முஸான் அதை வைத்திருப்பதற்கான காரணத்தைக் கேட்டார். மேலும், அந்தக் கத்தியைக் கையில் எடுத்துப்பார்த்தார். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது, யாரோ ஒருவர் அவர்களைப் பார்த்துவிட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு அந்த நபர், 'ஹுர்முஸான் ஃபைரோஸிடம் இந்தக் கத்தியைக் கொடுத்ததை நானே பார்த்தேன்' என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறிய மகன் உபைதுல்லாஹ் விசாரிக்காமல் தானே ஹுர்முஸானைக் கொன்று விட்டார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபா ஆன போது, அன்னார் ஹுர்முஸானின் மகனை வரவழைத்தார்கள். மேலும், உபைதுல்லாஹ்வை அவரிடம் ஒப்படைத்தவாறு, 'எனது மகனே! இவர் உனது தந்தையைக் கொன்றவர். ஆக, நீ

**சென்று அவரைக் கொன்று விடு' என்று கூறினார்கள். பின்னர் ஹுர்முஸானுடைய மகன் மக்களின் பரிந்துரையின் பேரில் உபைதுல்லாஹ்வைக் கொல்லவில்லை; எனினும், இதன் மூலம் கொலையாளியைப் பிடிப்பதும் தண்டனை அளிப்பதும் அரசாங்கத்தின் பணியாகும் என்பது நிரூபணமாகிறது.**

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இனிவருங்காலங்களிலும் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், முஹம்மது சயித் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய நஸீம் சயீத் சாஹிபா அவர்கள், (இவர்கள் தில்லியைச் சேர்ந்த ஆய்வாளர் ஹஸ்ரத் அல்ஹாஜ் ஹாஃபிஸ் டாக்டர் சய்யித் ஷஃபீ சாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள்); ஜெர்மனியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தாவூத் சுலைமான் பட் சாஹிப் அவர்கள்(மர்ஹூம் ஜெர்மனியில் சிறப்பு பாதுகாப்புப் பணியை மிகவும் முகமலர்ச்சியோடு செய்து வந்தார்கள்); ஸியால்கோட் மாவட்டத்தின் டப்பீ ஜமாஅத்தைச் சேர்ந்த குலாம் முஸ்தஃபா அஃவான் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய ஸாஹிதா பர்வீன் சாஹிபா அவர்கள்; இலண்டனைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் வஹீத் சாஹிப் அவர்கள் மற்றும் வங்கதேச ஜமாஅத்தின் முன்னாள் தேசிய அமீர் மதிப்பிற்குரிய அல்ஹாஜ் மீர் முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்து, ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். மேலும், அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர் படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمکم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**